முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!!

தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான். எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 10 திகதி முதல்

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 17 திகதி வரை

(27.08.2023 ஞாயிறு முதல் 03.09.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. பண்பானவர்களை கொண்ட பாரதமே
   பரோபகாரமிக்க ஞானவான்களை
   இன்பமாகக் கொண்ட தமிழகமே
   இந்தியா தமிழகத்தின் வருங்கால பலனாக
2. ஆகவே சோபகிருது யாளித் திங்கள்
   அருளவே தசதிகதிமேல் மூவைபீர் திகதி வரை
   வகைபட நடக்கும் வார நிகழ்வாக
   வழங்குவேன் அகத்தியனும் வார ஆசிதனை
3. ஆசிதனில் அரசாங்கம் தயவுபட
   அனைவருக்கும் பயன் தரும்படி
   பேசிட விலை ஏற்றம் இன்றி
   பொதுத் துறை அனைத்தும் காத்து
4. காத்துமே சாமானியரும் பயனுற
   களம் காண வேண்டும் ஆளுமையில்
   உத்தமமிலா அரசின் வருவாயென
   ஊழல் வழிகளை அடைக்காது
5. அடைக்காது கட்டண விகிதமாக
   அனைத்திலும் ஏற்றம் செய்தால்
   தடைபடும் வளர்ச்சிக் குன்றி
   தமிழகம் இந்தியா பின்னடைவு
6. பின்னடைவு உபரி இன்றியே
   பொருளாதார பற்றாக் குறை
   எந்நாளும் தொடர நேரும்

இந்தவித நிலைகள் மாறி

7. மாறியே வளர்ச்சி நிலைகாண
மக்களை வஞ்சிக்கும் திட்டமிலா
ஆறுதலும் நல்ல மாறுதலுமாக
அத்தியாவசிய அனைத்துத் துறைகளுமே

8. துறைகளுமே அதிகார வர்க்கங்கள்
தன்கடமை சேவை உணர்ந்து
குறைவின்றி உண்மைபட தொண்டாற்ற
கூறிடுவேன் ஆளுமைகள் வழிநடத்த

9. வழிநடத்த இந்தியா தமிழகம்
வளம் கொண்ட நல்ல பலம்கண்ட
தொழில் கழனி மருத்துவம் கல்வியென
துறைகள் அத்தனையும் வளர்ந்தோங்கும்

10. ஓங்கியே வல்லரசு தேசமாகிட
ஓங்கார ஞானியர்கள் காட்டும்
ஓங்கார வழிகளை பின்பற்றிட
உலகே வியக்க ஆளுமைகள் சிறக்கும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 10ம் நாள் **27.08.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் ஆவணி மாதம் 17ம் நாள் **03.09.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

பண்பு மிக்கவர்களை அதிகமாக கொண்டுள்ள பாரத தேசமே! பரோபகாரம் மிகுந்து தயவுடன் கூடிய ஞானவான்களை அதிகமாக கொண்டுள்ள தமிழகமே! சிறப்பு மிக்க இந்தியா தமிழகத்தில் சோபகிருது வருடம் ஆவணி மாதம் 10ம் நாள் **27.08.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் ஆவணி மாதம் 17ம் நாள் **03.09.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாட்டு மக்கள் அவைரும் பயன் அடையும் விதத்திலே நாட்டில் நிலவும் விலைவாசி ஏற்றங்களை கட்டுப்படுத்த வேண்டும். மக்கள் நலனிற்காக

உருவாக்கப்பட்ட பொதுத்துறை நிர்வாகங்களை காப்பாற்றி அவை சாதாரண மனிதருக்கும் பயனளிக்கும் வகையிலே உறுதிபடுத்த வேண்டுமப்பா.

மக்களை வருத்தும் வகையிலே அரசு வருவாயை அதிகப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலே மக்கள் மீது கட்டணங்களை, சேவை வரிகளை அதிகப்படுத்தாமல் துறைகளிலே நடக்கின்ற ஊழல் செய்வதற்கு ஏதுவாக உள்ள அனைத்து விதமான வழிகளையும் தடுத்து ஊழல், லஞ்சம் இல்லாமல் பாதுகாக்க வேண்டுமப்பா. அவ்வாறின்றி மக்கள் மீது அதிக கட்டணங்களை மேன்மேலும் விதித்து வந்தால் துறைகளின் வளர்ச்சி தடைபடும். அரசு துறைகளின் நோக்கம் நிறைவேறாது. தேசம் பின்னடைவை சந்திக்க நேருமப்பா. வருவாய் குறைந்து பற்றாக்குறை ஏற்படுமப்பா.

இப்படிப்பட்ட தேக்க நிலைகள் மாற்றம் அடைந்து வளர்ச்சி பாதையிலே செல்ல வேண்டுமாயின் மக்களுக்கு பயன் தராத திட்டங்களை விலக்கி, அனைத்து துறைகளிலும் அதிகாரத்தில் உள்ள அதிகாரிகள் அவரவரும் தன் கடமையை உணர்ந்து தனது சேவையை மக்களுக்கு மனமுவந்து அளித்து உண்மையுடன் தொண்டுள்ளத்தோடு செயல்பட்டால் அதற்குரிய வகையிலே அரசும் கட்டுப்படுத்தி அவர்களை மேன்மையுடன் வழி நடத்தி வர இந்தியா தமிழகம் வளமும் நலமும் பலமும் மிக்க நாடாகும் தொழில் துறை, விவசாயம், மருத்துவம், கல்வி என அனைத்து துறைகளிலும் வளர்ந்து மக்கள் அனைவரும் பயன் பெறுவார்கள் நாடு பலம் பெற்று மக்கள் ஆதரவு மிக்க வல்லரசாக மாறிடும்.

வளமும் நலமும் வல்லமையும் மிக்க நாடாக தேசம் மாறிட வேண்டுமாயின் தர்மத்தின் பாதையை காட்டும் அரங்கரின் சன்மார்க்க தயுவு நெறிகளை பின்பற்றி நடந்திட உலகமே வியக்குமாறு ஆட்சி முறை சிறப்படையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–